**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 9/2017**

**வழக்கு சாட்சி: PW.17**

**தேதி: 14.06.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **இளங்கோவன்** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **பெரியசாமி** | **தொழில்:** | **ரயில்வே கேங் மேன்** |
| **கிராமம்:** | **காரைக்குடி** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **காரைக்குடி** | **வயது:** | **44/2023** |

(எதிரிகள் 1, 2 ஆஜர் இல்லை, 1, 2 எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு-317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3வது எதிரி ஆஜர்.)

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் காரைக்குடியில் ரயில்வேயில் மேஸ்திரியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.02.2015 அன்று நான் நமணசமுத்திரம் ரயில்வே பாதையில் கீ மேனாக பணிபுரிந்து வந்தேன். 464/1-2 கி.மீ பாதையில் ஒரு ஆண் பிரேதம் அடிபட்டுக் கிடந்தது. புதுக்கோட்டை ஸ்டேஷன் மாஸ்டருக்கு காலை 10.30, 11.00 மணியளவில் தகவல் கூறினேன். காரைக்குடியிலிருந்து ரயில்வே சார்பு ஆய்வாளர் உட்பட 2, 3 காவலர்கள் வந்தார்கள். காலை 11.00 மணியளவில் வந்தார்கள். இறந்து போனவர் கட்டம் போட்ட சட்டையும் லுங்கியும் அணிந்திருந்தார். பிரேதத்தை வெளியில் எடுத்து வைத்துவிட்டு ஆம்புலன்ஸ் மூலமாக எடுத்துச் சென்றுவிட்டார்கள்.

**(சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கவும் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் நமணசமுத்திரம் ரயில்வே பாதையில் ஆண் பிரேதத்தை பார்த்தவுடன் நமணசமுத்திரம் ரயில்வே கேட் நம்பர் 386க்கு சென்று கேட் கீப்பர் லின்வீஸ் என்பவரிடம் தகவல் சொல்லியும் என்னுடைய உயர் அதிகாரி புதுக்கோட்டை ரயில் நிலைய அதிகாரிக்கு தகவல் சொன்னேனா என்றால் சொன்னேன். இறந்து போனவர் நமணசமுத்திரம் காவல் நிலையம் எதிரே மளிகை கடை மற்றும் டீ கடை வைத்திருக்கும் கிருஷ்ணமூர்த்தி என நான் விசாரித்துத் தெரிந்து கொண்டேனா

என்றால் தெரிந்து கொண்டேன். சம்பவயிடத்திற்கு காரைக்குடி ரயில்வே போலீசார் வந்து காரைக்குடி ரயில்வே காவல் நிலையக் குற்ற எண்.19/2015 பிரிவு 174 சிஆர்பிசி பிரகாரம் சம்பவயிடமான திருமயம் - புதுக்கோட்டை இருப்புப் பாதை சம்பவயிடத்தைப் பார்வையிட்டு மாதரி வரைபடங்கள், பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றால் ஆமாம். அந்த பார்வை மகஜரில் நானும் தேக்காட்டூர் தலையாரி ரெங்கசாமியும் சாட்சிகளாக கையெழுத்துப் போட்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்க நான் நடந்த விபரங்கள் கூறினேன்.

**2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

பிரேதம் கிடந்ததை நான் எத்தனை மணிக்கு பார்த்தேன் என்றால் 10.30 - 11.00 மணியிருக்கும். நான் பார்த்த சமயத்தில் அங்கு யாரும் இருந்தார்களா என்றால் யாரும் இல்லை. காரைக்குடி போலீசார் அந்த இடத்திற்கு 10 முதல் 15 நிமிடத்திற்குள் வந்துவிட்டார்கள். போலீசார் வரும் போது பிரேதத்திற்கு பக்கத்தில் 7, 8 நபர்கள் இருந்தார்கள். நான் பார்க்கும் போது எவ்வாறு பிரேதம் கிடந்ததோ அவ்வாறு தான் போலீசார் வரும் போதும் கிடந்தது. போலீசார் என்னை சம்பவயிடத்தில் வைத்து மட்டும் தான் விசாரித்தார்கள் வேறு எங்கும் வைத்து என்னை விசாரிக்கவில்லை. பொதுவாக ரயில்வே பாதையில் யாரும் இறந்துவிட்டால் போலீசார் வரும் வரை பிரேதத்தை எடுக்கமாட்டோம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக காரைக்குடி ரயில்வே காவல் நிலையத்திற்கு நான் செல்லவில்லை. நான் கையெழுத்து செய்த பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தேக்காட்டூர் தலையாரி ரெங்கசாமி போலீசார் சம்பவயிடத்திற்கு வருவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்பாக வந்துவிட்டார். நான் சொல்வது போல் சம்பவயிடத்தில் வைத்து பார்வை மகஜரில் நான் கையெழுத்து செய்யவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் அரசு அலுவலர் என்பதால் காரைக்குடி ரயில்வே போலீசார் தாக்கல் செய்துள்ள வழக்கில் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.7 பார்வை மகஜரில் எனது பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 1 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்கிறார்கள்.